தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண் 020/ந/2023
நாள் 05.03.2023

திரு.R.ஜெகநாதன்,
அல்லிநாயக்கன் பாளையம்,
நாமக்கல் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
திருச்செங்கோடு நகராட்சி,
நாமக்கல் மாவட்டம். – எதிர் மனுதாரர்

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம், படைவீடு, அல்லிநாயக்கன்பாளையம், அண்ணாநகர், கதவு எண்.12/26–B என்ற முகவரியில் வசிக்கும் திரு.R.ஜெகநாதன், என்பவரின் 27.01.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.01.2023 அன்று பெறப்பட்டு 020/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம், படைவீடு, அல்லிநாயக்கன்பாளையம், அண்ணாநகர், கதவு எண்.12/26–B என்ற முகவரியில் வசிக்கும் திரு.R.ஜெகநாதன், என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“எனது சித்தப்பா திரு. M.மூர்த்தி என்பவரது மகளின் பிறப்புச் சான்றிதழில் அவரது மனைவியின் பெயர் ஜீவா என்பதற்கு பதிலாக ஜீவிதா என்று உள்ளதால் அவரது மனைவியின் பெயர் திருத்தம் செய்வதற்கு 17.09.2022 அன்று திருச்செங்கோடு நகராட்சியில் பிறப்பு (ம) இறப்பு பதிவாளர் திரு.குமரவேல் என்பவரிடம் திருத்தம் செய்வதற்கு மனு அளித்துள்ளார். அதை பெற்றுக் கொண்ட பிறப்பு (ம) இறப்பு பதிவாளர் இருபெயர்கள் கொண்ட ஒருவரே என்ற “இருவரும் ஒருவர் சான்று” வட்டாட்சியரிடமிருந்து வாங்கி விண்ணப்பித்தால் பெயர் திருத்தம் செய்யப்படும் என எங்களுக்கு பதிவு தபால் மூலம் கடிதம் ஒன்றை அனுப்பினார்.

எங்களது நாமக்கல் மாவட்டத்தில் உள்ள குமாரபாளையம் வட்டாட்சியரிடம் கேட்ட போது தற்பொழுது இருவரும் ஒருவர் சான்றுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் தடைவிதித்துள்ளார் என்றும், அதன் சுற்றறிக்கையின் நகலையும் எங்களுக்கு அளித்தார். மேலும் நாங்கள் திருச்செங்கோடு நகராட்சி அலுவலகத்தில் உள்ள பிறப்பு இறப்பு பதிவாளரை நேரில் சந்தித்து எங்களது மாவட்ட ஆட்சியர் 7 வகையான சான்றிதழ்களுக்கு தடைவிதித்து அரசு

அலுவலங்களுக்கு சுற்றறிக்கை அனுப்பியுள்ளார் என்று கூறி சுற்றறிக்கையின் நகலை காண்பித்தோம்.

மேலும் பிறப்புச் சான்றிதழில் திருத்தம் செய்ய வேண்டிய பெயருக்கு ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை, குடும்ப அட்டை (பழையது, புதியது), பேன் கார்டு, வங்கி கணக்கு புத்தகம், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலவாரிய உறுப்பினர் அட்டை, மருத்துவமனையில் பரிசோதித்த பதிவு அட்டை, அவரது மகளின் T.C. மற்றும் மதிப்பெண் சான்றிதழில் அவரது அம்மாவின் பெயர் உள்ளது எனவும் கூறினோம்.

ஆனால் பிறப்பு (ம) இறப்பு பதிவாளர் (திரு.குமரவேல்) அவர்கள் எனக்கு இருவரும் ஒருவர் என்கிற சான்றிதழ் இருந்தால் மட்டுமே பிறப்புச் சான்றிதழில் பெயரை திருத்தம் செய்வேன், இல்லையெனில் திருத்தம் செய்ய முடியாது என்று எங்களிடம் கடிந்து பேசி, எங்களை திருப்பி அனுப்பி வைத்துவிட்டார். இவரது இச்செயல் எங்களுக்கு மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

எனது சித்தப்பாவின் மகள் அதாவது எனது தங்கை M.பரணிஸ்ரீ தற்பொழுது இளங்கலை அறிவியல் முதலாம் ஆண்டு படித்து வருகிறாள். இவளது எதிர்காலத்தை கருத்தில் கொண்டு எங்களிடம் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் பிறப்புச் சான்றிதழில் அவளது தாயார் பெயரை திருத்தம் செய்ய (விசாரணை செய்து) திருச்செங்கோடு நகராட்சி, பிறப்பு இறப்பு பதிவாளருக்கு, ஆணையிட தங்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் நாமக்கல் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் சுற்றறிக்கையை மதிக்காமல் செயல்படும் பிறப்பு இறப்பு பதிவாளரிடம் விசாரணை நடத்தி, அவரின் மேல் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுத்திட வேண்டுமாய் தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 02.02.2023 நாளிட்ட கடிதம் மூலம் திருச்செங்கோடு நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

திருச்செங்கோடு நகராட்சி ஆணையாளர் தனது 20.02.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

- ''திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் 28.04.2005 அன்று திரு.மூர்த்தி / ஜீவா என்ற தம்பதிக்கு பிறந்த மூ.பரணிஸ்ரீ என்ற பெண் குழந்தையின் பிறப்பு பதிவு எண்.561/2005/03, பதிவு தேதி 11.05.2005–ல் குழந்தையின் பெயர் எம்.பரணிஸ்ரீ (M.Parani Sri) என்றும் தந்தை பெயர் மூர்த்தி (Moorthi) என்றும் தாயின் பெயர் ஜீவிதா (Jeevitha) என்றும் பதியப்பட்டு 26.09.2008 அன்று சான்று வழங்கப்பட்டுள்ளது.
- மேற்படி வழங்கப்பட்ட பிறப்பு சான்றில் குழந்தை பெயர், தந்தை பெயரில் உள்ள ஆங்கில எழுத்து பிழையையும் மற்றும் தாயார் பெயரை முழுமையாக திருத்தம் செய்து வழங்கிட கோரியும் திரு.மூர்த்தி என்பவரால் 17.09.2022 அன்று, முதல் முறையாக பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளரிடம் விண்ணப்பம் அளித்துள்ளார். அதன்படி பிறப்பு பதிவில் குழந்தையின் பெயரில் ஆங்கில எழுத்துப் பிழை எம்.பரணிஸ்ரீ (M.Parani Sri) என்பதை மூ.பரணிஸ்ரீ (M.Bharani Sri) என்றும் தந்தை பெயர் மூர்த்தி (Moorthi) என்பதை மூர்த்தி (Moorthy) என்றும் ஆங்கில எழுத்துப் பிழை பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளரால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

- இரண்டாம் முறையாக மூ.பரணிஸ்ரீ என்பவரின் பிறப்பு சான்றிதழில் தாயின் பெயர் ஜீவிதா என்பதற்கு பதிலாக ஜீவா என முழுமையாக பெயர் திருத்தம் செய்து வழங்கிட கோரி பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளிடம் விண்ணப்பித்துள்ளார்.
- பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் திரு.மு.குமரவேல் ஆணையாளரின் ஒப்புதல் ஏதும் பெறாமல் குழந்தையின் பிறப்பு சான்றிதழில் குழந்தை பெயர் மற்றும் தந்தையின் பெயரில் உள்ள ஆங்கில எழுத்து பிழையை திருத்தம் செய்துள்ளார். மேலும் தாயின் பெயர் திருத்தம் செய்ய “ இருவரும் ஒருவர்” என வட்டாட்சியரிடம் சான்று பெற்று சமர்ப்பித்த பின்னர் திருத்தம் செய்யப்படும் என மனுதாரருக்கு ஆணையரின் ஒப்புதல் பெறாமல் தன்னிச்சையாக 23.09.2022 அன்று அறிவிப்பு வழங்கியுள்ளார்.
- மத்திய அரசு பிறப்பு மற்றும் இறப்பு பதிவு சட்டம் 1969 பிரிவு 15–ன்படி பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகளில் ஆணையரின் ஒப்புதல் பெற்று திருத்தம் செய்யப்பட வேண்டும். ஆனால் இந்நேர்வில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் திரு.மு.குமரவேல் தன்னிச்சையாக செயல்பட்டது தெரிய வருகிறது.
- இந்நிலையில் பத்து ரூபாய் இயக்கத்தை சார்ந்த திரு.ஜெகநாதன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் அளித்த புகாரின் நகல் ஆணையாருக்கு கிடைத்தவுடன் பத்து ரூபாய் இயக்கத்தை சார்ந்த திரு.ஜெகநாதன் என்பவர் புகாரின் அடிப்படையில் மனுதாரருக்கு, அறிவிப்பு வழங்கப்பட்ட கோப்பினை ஆணையாளரின் ஆய்வுக்கு சமர்ப்பிக்குமாறு பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் திரு.மு.குமரவேல் என்பவருக்கு குறிப்பாணை வழங்கப்பட்டது. ஆனால் குறிப்பாணையை பெற்றுக் கொள்ளாமல், அவர் கோப்பு சமர்ப்பிக்காமல் பணிக்கு வருவதை நிறுத்திவிட்டார்.
- மூ.பரணிஸ்ரீ என்பவரின் பிறப்பு சான்றிதழில் தாயின் பெயர் ஜீவிதா என்பதற்கு பதிலாக ஜீவா என முழுமையாக பெயர் மாற்றம் செய்ய கோரியதற்கு வட்டாட்சியரிடமிருந்து இருவரும் ஒருவர் என சான்று பெற்று சமர்ப்பித்த பின்னர் தாயின் பெயர் திருத்தம் செய்யப்படும் என பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் மனுதாரருக்கு ஆணையாரின் ஒப்புதலின்றி அவராகவே தன்னிச்சையாக அறிவிப்பு வழங்கியுள்ளார்.
- மத்திய அரசு பிறப்பு மற்றும் இறப்பு பதிவு சட்டம் 1969 பிரிவு 15–ன்படி பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகளில் ஆணையரின் ஒப்புதல் பெற்று திருத்தம் செய்யப்பட வேண்டும். ஆனால் இந்நேர்வில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் திரு.மு.குமரவேல் தன்னிச்சையாக செயல்பட்டது தெரிய வருகிறது.
- திரு.மு.குமரவேல் அவர்களின் பொறுப்பற்ற இச்செயலினை தெரிவித்து கடும் நடவடிக்கை எடுக்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு 17.02.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.
- புகார்தாரர் திரு.ஜெகநாதன் என்பவரின் புகார், ஆணையாளரின் கவனத்திற்கு வந்தவுடன் திரு.மூர்த்தி / ஜீவா என்ற தம்பதிக்கு பிறந்த மூ.பரணிஸ்ரீ என்ற பெண் குழந்தையின் பிறப்பு சான்றிதழில் தாயின் பெயர் திருத்தம் செய்ய ஏதுவாக மனுதாரர் வசம் உள்ள அனைத்து ஆவணங்களுடன் திரு.மூர்த்தி என்பவரை 07.02.2023 அன்று காலை ஆணையாளரை நேரில் சந்திக்க அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. குழந்தை பிறப்பிற்கு முன்பு உள்ள ஆவணங்களில் தாயாரின் பெயர் “ஜீவா” என குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்கவில்லை. குழந்தை பிறந்த போது 2005–ல் பெற்ற சான்றிதழிலும் ஜீவிதா என பதியப்பட்டுள்ளது. 17 ஆண்டுகளாக இதனை சரி செய்து கொள்ளாமல் தற்போது திருத்தம் கோரியுள்ளது தெரிய வந்ததால் அதனை சரி செய்ய

குழந்தை பிறந்த அரசு மருத்துவமனையின் திருத்தம் கோரும் கடிதம் பெற்று மீள விண்ணப்பிக்க அறிவுறுத்தப்பட்டது.

- அதன்படி திரு.மூர்த்தி என்பவர் உரிய ஆவணங்களான குழந்தையின் பள்ளி சான்றுகள், முதல் பட்டதாரி சான்று, திருமதி.மூ.ஜீவா அவர்களின் ஆதார் அட்டை நகல், வருமான சான்று நகல், வங்கி கணக்கு புத்தக நகல், குடும்ப அட்டை நகல், வாக்காளர் அடையாள அட்டை நகல் மற்றும் அரசு மருத்துவமனை கடிதம் ஆகிய ஆவணங்களின் அடிப்படையில் மூ.பரணிஸ்ரீ என்பவரின் பிறப்பு சான்றிதழில் தாயின் பெயர் திருத்தம் செய்ய மீள் விண்ணப்பத்தின் அடிப்படையில் தாயின் பெயர் "ஜீவா" என்று திருத்தம் செய்து சான்றிதழ் வழங்கப்பட்டது.

எனவே, பத்து ரூபாய் இயக்கத்தை சார்ந்த திரு.ஜெகநாதன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் அளித்துள்ள புகார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு மனுதாரர் அளித்த ஆவணங்களின் அடிப்படையில் குழந்தையின் பிறப்பு சான்றிதழில் தாயின் பெயர் திருத்தம் செய்து தற்போது சான்று வழங்கப்பட்டு விட்டது. எனவே, புகார்தாரரின் கோரிக்கை முழுமையாக நிறைவேற்றப்பட்டு விட்டதால், புகார்தாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அதே நேரத்தில் இக்கோப்பினை சரியாக கையாளாமலும் ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு வராமலும் தன்னிச்சையாக செயல்பட்டு மனுதாரரை அலைகழித்த பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் திரு.மு.குமரவேல், துப்புரவு ஆய்வாளர் மீது துறைரீதியாக கடும் நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் திருச்செங்கோடு நகராட்சி ஆணையரும் 23.02.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 02.02.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.R.ஜெகநாதன், 23.02.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

(5) எதிர்மனுதாரரான திருச்செங்கோடு நகராட்சி ஆணையாளர் 23.02.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"திருசெங்கோடு நகராட்சியால் வழங்கப்பட்ட மூ. பரணிஸ்ரீ என்பவரின் பிறப்புச் சான்றிதழில், அவரது தாயாரின் பெயர் ஜீவா என்பதற்கு பதிலாக ஜீவிதா என உள்ளதாகக் குறிப்பிட்டு, திருத்தம் செய்ய வேண்டி பெறப்பட்ட மனுவையொட்டி, மேற்கண்ட சான்றிதழில் திருத்தம் செய்திட ஏதுவாக உரிய சான்றுகளைப் பெற்று, மூ. பரணிஸ்ரீ என்பவருக்கு அவரது தாயார் பெயர் ஜீவா என திருத்தம் மேற்கொள்ளப்பட்ட சான்றிதழ் மூ. பரணிஸ்ரீ என்பவருக்கு வழங்கப்பட்டுவிட்டது என தெரிவித்து, அதன் நகலினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேற்கண்ட பிறப்புச் சான்றிதழில் திருத்தம் செய்வது குறித்த மனுவினை ஆணையர் என்கின்ற முறையில் அதற்கு பொறுப்பான துப்புரவு ஆய்வாளர் மு. குமரவேல் என்பவர் எனது கவனத்திற்கு கொண்டுவராமல் மேற்கண்ட துப்புரவு ஆய்வாளர் தன்னிச்சையாக செயல்பட்டதால், மேற்கண்ட காலதாமத நிகழ்வு ஏற்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் 20.2.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப்பிரிவு 2 (a) (v)–ன்படி குற்றச்சாட்டு என்பது பொதுப் பணியாளர்களில் அவர் எந்த வகையைச் சேர்ந்தவராக இருக்கின்றாரோ அதற்கேற்ப அவரால் தானாக கடைப்பிடிக்கப்பட வேண்டியதான நேர்மை விதிமுறைகள் மற்றும் நன்னடத்தைக்கு இணங்கிய வகையில் செயற்படுவதற்கு தவறியிருக்கிறார் என்று உறுதி செய்யப்பட்டிருப்பது எதுவும் என்று பொருள்படும்; என இம்முறைமன்ற நடுவர் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, திருச்செங்கோடு நகராட்சி ஆணையாளரின் அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

நாமக்கல் மாவட்டம், அல்லிநாயக்கன்பாளையம் என்கிற இடத்தினை சார்ந்த மனுதாரர் திரு.R.ஜெகநாதன் என்பவர் தனது 27.01.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் தனது சித்தப்பாவின் மகளான மூ.பரணிஸ்ரீ என்பவரின் பிறப்பு சான்றிதழில் அவரது தாயாரின் பெயர் ஜீவிதா என்று தவறுதலாக உள்ளதற்கு பதிலாக ஜீவா எனப் பெயர் திருத்தம் செய்யுமாறு திருச்செங்கோடு நகராட்சியில் 17.09.2022 அன்று மனு அளித்து பலமுறை முறையிட்டும் பெயர் திருத்தம் செய்து தரப்படவில்லை என புகாராக தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் சித்தப்பாவின் மகளான கல்லூரியில் பயிலும் மாணவி எம்.பரணிஸ்ரீ என்பவரின் பிறப்புச் சான்றிதழில் அவரது தாயாரின் பெயர் தவறுதலாக 'ஜீவதா' என உள்ளதை 'ஜீவா' என திருத்தம் செய்யக் கோரி, அதற்கு ஆதாரமாக எம்.பரணிஸ்ரீ என்பவரின் மாற்றுச் சான்றிதழ் (TC), 10ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், அவரது தாயாரின் ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றின் நகல்களுடன் 17.09.2022 நாளிட்ட மனு திருச்செங்கோடு நகராட்சியில் சமர்ப்பிக்கப்பட்டத்தில், திருச்செங்கோடு நகராட்சியின் பிறப்பு – இறப்பு பதிவாளர், நகராட்சி ஆணையரின் அனுமதியின்றி தன்னிச்சையாக தனது 23.09.2022 நாளிட்ட கடிதத்தில் ஜீவிதா என்பதை ஜீவா என திருத்தக் கோரும் மேற்படி இரு பெயர்கள் கொண்ட ஒருவரே என வட்டாட்சியரிடமிருந்து சான்று பெற்று அனுப்பினால் மட்டுமே திருத்தம் செய்யப்படும் என தெரிவித்ததைத் தொடர்ந்து, மனுதாரர் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மூலம் பெறப்பட்ட அரசால் அனுமதிக்கப்படாத 'இருவரும் ஒருவர்' என்ற சான்று வழங்கப்படுவதை தவிர்த்திட வேண்டும் என்கிற 09.04.2022 நாளிட்ட மாவட்ட ஆட்சியரின் சுற்றறிக்கையினை திருச்செங்கோடு நகராட்சி பிறப்பு – இறப்பு பதிவாளரிடம் காண்பித்தும், பிறப்புச்சான்றில் எவ்வித திருத்தமும் மேற்கொள்ளாமல் மனுதாரரை அலைகழித்துள்ளதை ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது. மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் இதுகுறித்து புகார் அளித்தவுடன், மனுதாரர் பெயர் திருத்தம் கோரி சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் திருச்செங்கோடு நகராட்சி ஆணையர் 20.02.2023 அன்று பிறப்புச்சான்றிதழில் ஜீவிதா என்பதை ஜீவா என பெயர் திருத்தம் செய்து வழங்கியுள்ளதை ஆவணத்தின் மூலம் அறிய முடிகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சான்றிதழ்கள் வழங்குவதில் எவ்வித புகார்கள் மற்றும் காலதாமதங்களுக்கும் இடமளிக்கமால் உடனடியாக வழங்குவதை உறுதி செய்திட வேண்டும் என வருவாய்த் துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்கள். மக்கள் பணிகளில் எவ்வித தாமதமோ தேவையற்ற சுணக்கமோ செய்யக்கூடாது என்று அரசு விதிகளும் அறிவுரைகளும் இருந்த போதிலும் இதுபோன்ற தவறுகளை வேண்டுமென்றே ஏற்படுத்தும் அரசு ஊழியர்கள் மீது

கடுமையான நடவடிக்கை எடுத்தல் அவசியம். இச்சூழ்நிலையில் திருச்செங்கோடு நகராட்சியின் பிறப்பு – இறப்பு பதிவாளர், நகராட்சி ஆணையரின் அனுமதியின்றி தன்னிச்சையாக பிறப்புச்சான்றில் திருத்தம் செய்யும் நேர்வில், அரசால் அனுமதிக்கப்படாத 'இருவரும் ஒருவர்' என்கிற சான்றினை சமர்ப்பிக்கும்படி தெரிவித்துள்ளது பிறப்பு – இறப்பு பதிவாளரின் அலட்சியப் போக்கையும் மற்றும் பொறுப்பற்ற செயலையும் காட்டுகிறது. இவ்வாறு நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படும் வகையில் கடமை தவறி பிறப்புச் சான்றிதழில் காலதாமதமாக திருத்தம் செய்வதற்கு காரணமாயிருந்த சம்பந்தப்பட்ட திருச்செங்கோடு பிறப்பு இறப்பு பதிவாளரை உடனடியாக பணியிடை நீக்கம் (suspension) செய்து அவருக்கு எதிராக உரிய விதிகளின்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இம்முறைமன்ற நடுவம் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

பொதுமக்களிடமிருந்து சான்றிதழ்கள் வழங்கக் கோரி பெறப்படும் கோரிக்கைகள் / மனுக்களை, எவ்வித காலதாமதமின்றியும் எவ்வித புகார்களுக்கும் இடமளிக்காத வண்ணம் உடனுக்குடன் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும் என அனைத்து நகராட்சிகள் / மாநகராட்சிகளின் ஆணையாளர்களுக்கு அறிவுறுத்தி ஒரு சுற்றறிக்கையினை அனுப்பிவைக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

2023 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 05 –ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.R.ஜெகநாதன்,
12/26B, அண்ணாநகர், அல்லிநாயக்கன்பாளையம்,
படவீடு (போஸ்ட்) குமாரபாளையம் தாலுக்கா,
நாமக்கல் – 637 303, நாமக்கல் மாவட்டம்.

2) ஆணையாளர், திருச்செங்கோடு நகராட்சி,
திருச்செங்கோடு – 637 211.
நாமக்கல் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

06/03/23

செயலாளர்.

06/03/23